




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 280 03.04.2026 FRIDAY PANGUNI: 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 280 03.04.2026 வெள்ளிக்கிழமை பங்குனி : 20 விலை : ரூ.5/-


## அதிமுக பொல்லாத ஆட்சிக்கு

# "பொள்ளாச்சியே சாட்சி!"

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு...

ஈரோடு: ஏப்.3-

அதிமுக பொல்லாத ஆட்சிக்கு, பொள்ளாச்சியே சாட்சி என தமிழகமே சொன்னது; பெண்களுக்கான பாதுகாப்பு இபிஎஸ் ஆட்சியில் கேள்விக் குறியாக இருந்தது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஈரோட்டில் தேர்தல் பிரசாரத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: திராவிட மாடல் என்பது அனைத்து துறை வளர்ச்சி மாடல்; ஈரோட்டுக்கு பல திட்டங்களை கொண்டு வந்துள்ளேன்; திமுக அரசின் திட்டங்களால், வீட்டுக்கு ஒருவராவது பயனடைந்துள்ளனர். பெண்கள் பாதுகாப்பை பற்றி இபிஎஸ் பேச தகுதி இல்லை; அதிமுக பொல்லாத ஆட்சிக்கு, பொள்ளாச்சியே சாட்சி என தமிழகமே சொன்னது; பெண்களுக்கான பாதுகாப்பு இபிஎஸ் ஆட்சியில் கேள்விக் குறி.



பாலியல் தொல்லை

நாட்டிலேயே பெண்கள் அதிகம் வேலைக்கு போகும் மாநிலம் தமிழகம். தமிழகத்தின் வளர்ச்சி இபிஎஸ்க்கு எரிச்சலை தருகிறது. 86 சதவீதத்திற்கு மேலான வழக்குகளில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது திமுக ஆட்சியில் தான். அதிமுக ஆட்சியில் பெண் எஸ்பிக்கு டிஜிபியே பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். பெண்களுக்கு எதிராக குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு சட்டத்தை திருத்தியுள்ளோம். அதிமுக அரசின் சாதனைகளை சொல்ல இபிஎஸ்யிடம் எதுவுமில்லை.

துரோகம் லிஸ்ட்

மதுரை எய்ம்ஸை தவிர பாஜ சாதனை என்று சொல்ல பிரதமரிடம் ஒன்றும் இல்லை. நீட் துரோகம், மெட்ரோ துரோகம் என தேஜ கூட்டணியின் துரோகம் லிஸ்ட் நம்மிடம் உள்ளது. என்டிஏ என்னும் துரோக கூட்டணியை தமிழக மக்கள் ஏப்ரல் 23ம் தேதி நிச்சயம் தூக்கி எறிவார்கள். ஸ்டாலினின் இந்த 5 ஆண்டு கால ஆட்சியில் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருந்திருப்பீர்கள். காரணம் திராவிட மாடல் என்பது டெவலப்மெண்ட் மாடல்.

வாக்குறுதிகள்

அனைத்துத் துறைகளின் வளர்ச்சியாகவும், அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றமாகவும், அனைத்து மாவட்டங்களின் முன்னேற்றமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம். மீண்டும் திராவிட மாடல் ஆட்சிக்கு தயாரா? சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கிறோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## "கேரள மக்கள் பாஜகவை உற்சாகமாக ஆதரிக்கின்றனர்"

### பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி: ஏப்.3

கேரள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை வலுவாக ஆதரித்து வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மேலும், எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை வாக்காளர்கள் புரிந்துகொண்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கேரள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி இன்று மாலை நடைபெறவுள்ள "மேரா பூத் சப்சே மஸ்பூத் சம்வாத் ஸ்ரீ கேரளம்" நிகழ்ச்சியின் மூலம், கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாட உள்ளார்.

இந்த சூழலில் பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "கேரளம் முழுவதும் உள்ள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை உற்சாகமாக ஆதரித்து வருகின்றனர். எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை அவர்கள் நன்கு புரிந்துகொண்டுவிட்டனர். இன்று மாலை 4:30 மணிக்கு நடைபெறவுள்ள 'மேரா பூத் சப்சே மஸ்பூத் சம்வாத் ஸ்ரீ கேரளம்' நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2026ஆம் ஆண்டிற்கான கேரள சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறவுள்ளன. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் எல்டிஎஃப், யுடிஎஃப் மற்றும் என்டிஏ என மும்முனைப் போட்டி நிலவுகிறது.

மார்ச் 31 அன்று, கேரள பாரதிய ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால், கேரளத்தை உலகின் முக்கியமான சுற்றுலாத் தலமாக உருவாக்குவதாகவும், திருவனந்தபுரத்தை தகவல் தொழில்நுட்பத் தலைநகராகவும், கொச்சியை இந்தியாவின் கப்பல் கட்டுமான மையமாகவும், கோழிக்கோட்டை சுகாதாரம் மற்றும் மருத்துவ தலைநகராகவும், திருச்சூரை கலாச்சாரச் சுற்றுலாத் தலைநகராகவும், கடல்சார் ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கொல்லத்தை சர்வதேச அளவில் போட்டியிடக்கூடிய 'நீலப் பொருளாதார' மையமாகவும், கண்ணூரைப் பாதுகாப்புத் துறை சார்ந்த புத்தாக்க மையமாகவும் மேம்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 'பக்ஷ்ய ஆரோக்கிய சுரக்ஷா அட்டை' மூலம், மருந்துகள் மற்றும் மளிகைப் பொருட்களை வாங்குவதற்காக மாதந்தோறும் ரூ. 2,500 தொகையை பெறலாம். மேலும், கேரளாவில் எய்ம்ஸ் மருத்துவமனை ஒன்றை நிறுவுவதாகவும், திருவனந்தபுரத்தை கண்ணூருடன் இணைக்கும் அதிவேக ரயில் பாதையை மேம்படுத்துவதாகவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு இரண்டு இலவச எல்பிஜி சிலிண்டர்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் மாதந்தோறும் 20,000 லிட்டர் இலவச தண்ணீர் வழங்கப்படும் எனவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "ராதாபுரத்தின் ரத்தமும் சதையுமானவர் அப்பாவு!"

### 5வது வெற்றியை நோக்கி அதிரடிப் பயணம்!

### தொகுதியில் வேட்பாளர்கள் இன்றித் தவிக்கும் எதிர்க்கட்சிகள்

ராதாபுரம், ஏப்.3-

தமிழக அரசியலில் 'ராதாபுரம்' என்றாலே நினைவுக்கு வரும் பெயர் எம். அப்பாவு. சாதாரண ஆசிரியராகத் தொடங்கி, இன்று தமிழகத்தின் சபாநாயகராக உயர்ந்திருக்கும் இவரது அரசியல் பயணம், ஒரு வரலாற்றுப் பாடம். 2026 தேர்தல் களத்தில், தனக்கு நிகரான எதிரி எவருமின்றி, வெற்றியின் விளிம்பில் நின்று சிங்கம்போல் கர்ஜித்துக் கொண்டிருக்கிறார் 'அப்பாவு'.

**1. வீழ்த்த முடியாத சரித்திரம் (4 முறை வெற்றி!)**

கடந்த 30 ஆண்டுகளில் ராதாபுரம் தொகுதியின் அடையாளமாக மாறியிருக்கிறார் அப்பாவு. 1996: தமாகா சார்பில் முதல் வெற்றி. 2001: எந்தக் கட்சி ஆதரவும் இன்றி சுயேச்சையாக நின்று வென்று சாதனை படைத்தார். 2006: திமுக சார்பில் களம் கண்டு வெற்றியைத் தொடர்ந்தார். 2021: கடும் போராட்டங்களுக்குப் பிறகு மீண்டும் திமுக சார்பில் வெற்றி பெற்று, தமிழகச் சட்டப்பேரவை சபாநாயகராகப் பொறுப்பேற்றார். இந்த 2026 தேர்தலில்,



5வது வெற்றியைப் பதிவு செய்து ராதாபுரத்தைத் தனது கோட்டையாக மாற்றத் தயாராகிவிட்டார்.

**2. மக்கள் திட்டங்களின் நாயகன்:**

"கேட்காமலேயே கொடுப்பவர்" என்ற பெயரைப் பெற்றவர் அப்பாவு. தொகுதியின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அவர் செய்த பணிகள் மலையளவு. குடிநீர் புரட்சி: ₹605 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் 831 கிராமங்களுக்குத் தாமிரபரணி நீரைக் கொண்டு சென்றவர். வள்ளியூர் மேம்பாலம்: தொகுதியின் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கப் பல ஆண்டுகளாகக் காத்திருந்த வள்ளியூர் மேம்பாலத்தைச் சாத்தியமாக்கியவர். கல்வி - வீட்டுவசதி: ஏழை எளிய மக்களுக்காக 1000 வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் அரசுப் பள்ளிகளின் தரம் உயர்த்துதல் என இவரது பணிகள் தொகுதி முழுவதும் பேசப்படுகின்றன.

**3. களத்தில் தனித்திருக்கும் அப்பாவு!**

2026 தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ராதாபுரம் தொகுதியில் அப்பாவுக்குப் போட்டியாக வலுவான வேட்பாளர்கள் எவருமில்லை என்பதே நிதர்சனம். மாற்றுக்கட்சியினர் திணறிக் கொண்டிருக்கும் வேளையில், தனது தேர்தல் வியூகத்தால் தொகுதியைத் தனது முழு கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

"மக்களின் நாடித் துடிப்பு தெரிந்த ஒரே வேட்பாளர்" என்பதால், வாக்கு சேகரிப்பிற்குச் செல்லும் இடமெல்லாம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் இவருக்குப் பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது.


**ராதாபுரத்தின் ரத்தமும் சதையுமானவர் அப்பாவு!**

மக்கள் செல்வாக்கு மற்றும் அடுக்கடுக்கான திட்டங்களால் ராதாபுரத்தைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்துள்ளார் அப்பாவு. அவரை எதிர்த்துப் போட்டியிடப் பலமான வேட்பாளர் இன்றி எதிர்க்கட்சிகள் திணறுவதால், வெற்றி கனி ஏற்கனவே பறிக்கப்பட்டுவிட்டது என்கின்றனர் ரத்தத்தின் ரத்தங்கள்!

## எல்.முருகன் மீதான தேர்தல் விதிமீறல் வழக்குகள் ரத்து ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஏப்.3-

மத்திய அமைச்சர் எல்.முருகன் மீதான இரண்டு தேர்தல் விதிமீறல் வழக்குகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த 2024ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில், நீலகிரி தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் எல்.முருகன் போட்டியிட்டார். அப்போது, தேனாடுகம்பை கடநாடு கிராமத்தில் அனுமதியின்றி பொதுமக்கள் மத்தியில் கூட்டம் நடத்தியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு உதகமண்டலம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

இதேபோல, தொகுதிக்கு உட்பட்ட சத்தியமங்கலத்தில் உள்ள பள்ளியில் விதிகளை மீறி தேர்தல் கலந்தாய்வு கூட்டம் நடத்தியதாக, எல்.முருகனுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு, ஈரோடு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

அரசியல் உள்நோக்கம் காரணமாக தொடரப்பட்ட இந்த இரு வழக்குகளும் தொடரப்பட்டுள்ளதால், அவற்றை ரத்து செய்ய வேண்டும் என அமைச்சர் எல்.முருகன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள், நீதிபதி ஜெகதீஷ் சந்திரா முன் விசாரணைக்கு வந்தபோது, குறித்த கால அவகாசத்துக்குள் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்பதால், இரு வழக்குகளையும் ரத்து செய்ய வேண்டும் என அமைச்சர் முருகன் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அமைச்சர் எல்.முருகன் மீதான இரண்டு தேர்தல் விதிமீறல் வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார்.

## சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வேட்புமனு தாக்கல்!

சென்னை: ஏப்.3-

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இந்நிலையில், தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30ம் தேதி தொடங்கியது. வருகிற 6ம் தேதி வேட்புமனு தாக்கலுக்கு கடைசி நாளாகும். அன்று மதியம் 3 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படவிருக்கிறது. இதனிடையே திமுக, அதிமுக, தவெக மற்றும் நாதக ஆகிய கட்சி நிர்வாகிகள் தீவிரமாக களத்தில் செயலாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில். திமுக சார்பில் 2வது முறையாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் அதிகாரியிடம் இன்று (ஏப். 2) வேட்புமனு தாக்கல் செய்தார் . சேப்பாக்கத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சுகந்தியிடம், அவர் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவை தொகுதிகளின் வரிசைப்பட்டியலில் 19வதாக இடம்பெற்றுள்ள சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி, சென்னையின் மிக முக்கியமான அடையாளங்களை உள்ளடக்கியது.

இந்த தேர்தலில் திமுக சார்பில் மீண்டும் உதயநிதி ஸ்டாலின் போட்டியிடுகிறார். அதிமுகவில் ஆதி ராஜாராம், நாதகவில் ஆயிஷா பேகம், தவெகவில் டி.செல்வம் ஆகியோர் களம் இறங்கியுள்ளார்கள். இந்த ஆண்டு பிப்ரவரி 23ம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி, இத்தொகுதியில் 79 ஆயிரத்து 412 ஆண்கள், 84 ஆயிரத்து 396 பெண்கள், 58 மூன்றாம் பாலினத்தவர்கள் என மொத்தம் 1 லட்சத்து 63,866 வாக்காளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில், போட்டியிடும் வேட்பாளர் சு.முத்துசாமி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலரும் ஈரோடு மேற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான சிந்துஜாவிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலின் போது ராஜ்யசபா எம்பி அந்தியூர் செல்வராஜ், வழக்கறிஞர் அணி கண்ணன் உள்ளிட்ட திமுக பிரமுகர்கள் பங்கேற்றனர்.

# ‘பிரதமர் மோடி ஒரு கோழை’ பிரியங்கா காந்தி கடும் விமர்சனம்

திருவனந்தபுரம், ஏப்.3-

கேரளாவில் உள்ள 140 தொகுதிகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் 9ந்தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு, கேரளாவில் அரசியல் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரளாவில் ஆளும் இடதுசாரி முன்னணி கூட்டணிக்கும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர்கள் மாநிலம் முழுவதும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, இன்று புத்தந்தோப்பு பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

“நமது பிரதமர் ஒரு கோழை, அவருக்கு முதுகெலும்பு இல்லை. மேலும் தேசத்தின் எரிசக்தி பாதுகாப்பில் அவர் சமரசம் செய்து கொண்டார். எப்ஸ்டீன் கோப்புகளில் அவரது பெயர் இருப்பதால், அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார். இந்தியாவுக்காக குரல் கொடுக்க அவருக்குத் தைரியம் இல்லாததால், நாம் ஒவ்வொரு நாளும் அதற்கான விலையை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

போரின்போது வளைகுடா பகுதியில் சிக்கித் தவித்த இந்தியர்களுக்கு மோடியின் கொள்கைகள் பாதுகாப்பை வழங்கவில்லை. இடதுசாரி முன்னணி பா.ஜ.க.வின் பிடீமாக செயல்படுகிறது. அந்த கூட்டணியில் உள்ள எந்த தலைவராவது மோடியை எதிர்த்து பேசியிருக்கிறார்களா? அவர்கள் மீது அமலாக்கத்துறை, சி.பி.ஐ. அல்லது வருமான வரித்துறை மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதா?

மாநில மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து இடதுசாரி அரசு அலட்சியமாக இருந்தது. அரசு மருத்துவமனைகளில் பணியாளர்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளுக்கு பற்றாக்குறை உள்ளது. கேரளாவின் சுகாதார அமைப்பு சீர்குலைந்துள்ளது.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# “ஈரான் போர் முடிவை நெருங்குகிறது” நாட்டு மக்களுக்கு ட்ரம்ப் உரை

வாஷிங்டன், ஏப்.3-

டி.சி.: ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் இலக்குகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும், அமெரிக்கா வெற்றிக்கு மிக அருகில் இருப்பதாகவும் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மேற்கொண்ட போர் ஒரு மாதத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முதல்முறையாக நாட்டு மக்களுக்காக உரை நிகழ்த்தினார். வெள்ளை மாளிகையில் இருந்து 19 நிமிடம் அவர் ஆற்றிய தொலைக்காட்சி உரையில், ‘‘ஈரானுக்கு எதிரான போர் முடிவடையும் தருவாயில் உள்ளது. நாங்கள் இதை முடிக்கப் போகிறோம். மிக வேகமாக முடிக்கப் போகிறோம். நாங்கள் இலக்கை நெருங்கிவிட்டோம்.

ஈரான் ராணுவத்தை நசுக்க வேண்டும், ஈரானிய மதகுருமார்களின் அரசு பிராந்திய ஆயுதக் குழுக்களுக்கு அளிக்கும் ஆதரவை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், ஈரான் அணுஆயுதம் பெறுவதை தடுக்க வேண்டும் ஆகிய நோக்கங்களுக்காகவே இந்த போரில் அமெரிக்கா இணைந்தது. இந்த முக்கிய நோக்கங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்கு வாரங்களில் நமது ஆயுதப் படைகள் போர்க்களத்தில் விரைவான, தீர்க்கமான, மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளன. இதுபோன்ற வெற்றிகளை இதற்கு முன் மிகச் சிலரே கண்டிருக்கிறார்கள்.

ஈரானில் உள்ள அவர்களின் தலைவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டுவிட்டனர். அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களில் அவர்கள் இருக்க வேண்டிய கற்காலத்துக்கே அவர்களை திரும்ப அழைத்துச் செல்லப் போகிறோம். அமெரிக்க பேச்சுவார்த்தையில் ஈரான் தீர்வை எட்டாவிட்டால், அவர்களின் ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்தையும் நாங்கள் தாக்குவோம். எல்லா வாய்ப்புகளும் எங்களிடம் உள்ளன. அவர்களிடம் (ஈரானிடம்) எதுவும் இல்லை. அமெரிக்காவுக்கு ஆதரவாக இருக்கும் அரபு நாடுகள் காயப்படவோ அல்லது தோல்வியடையவோ நான் அனுமதிக்க மாட்டேன்’’ என தெரிவித்தார்.

# இரண்டாவது பட்டியல் தயாரிக்கும் வரை முன்பதிவு பயணிகள் ரயில் ஏறும் இடத்தை மாற்றும் முறை அமல்

சென்னை, ஏப்.3-

ரயில்வேயில் நிர்வாக ரீதியாகவும், பயணிகளின் வசதிக்காகவும் பல்வேறு புதிய மாற்றங்கள் அமல்படுத்தப்படுகின்றன. ரயில் டிக்கெட் அட்டவணை 4 மணி நேரத்துக்கு முன்பே தயாரிக்கப்படும்போது, பயணிகளுக்கு இருக்கைகள் உறுதி செய்யப்படாத பட்சத்தில், கடைசி நேரத்தில் பயணத் திட்டங்களை ரத்து செய்வதிலோ மாற்று ஏற்பாடுகளைச் செய்வதிலோ, அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.



புதிய விதிமுறைகளின்படி, முதல் டிக்கெட் அட்டவணை 9 நேரத்துக்கு முன்பே தயாரிக்கப்படுவதால் பயணிகள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைய மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும்.

இந்நிலையில், ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன், இரண்டாவது பட்டியல் தயாரிக்கும் வரையில், ரயில் ஏறும் இடத்தை மாற்றிக்கொள்ளும் வசதியை தெற்கு ரயில்வே அமல்படுத்தியுள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: புதிய விதிமுறைப்படி, ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரை ஏறும் இடத்தை மாற்றிக் கொள்ள முடியும். இரண்டாவது முன்பதிவுப் பட்டியலில் இடம் பெறும். காத்திருப்போர் பட்டியலில் இருப்போருக்கு, இந்த வசதி கிடையாது. இந்த வசதியை ஒருமுறை மட்டுமே பயன்படுத்த முடியும் என்றனர்.

# “போக்குவரத்துத் தொழிலாளர் வாழ்வில் ஒளியேற்றியவர் கலைஞர்!” - அமைச்சர் ஐ.பெரியசாமி உணர்ச்சிமிகுப் பேச்சு!

சின்னாளபட்டி, ஏப்.;03-

அரசு போக்குவரத்து துறையை உருவாக்கி போக்குவரத்து துறை ஊழியர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று போக்குவரத்து நகரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஐ.பெரியசாமி பேசியதோடு, போக்குவரத்து நகருக்கு நவீன வசதிகளுடன் கூடிய சமுதாய கூடம் மற்றும் நாடக மேடை அமைத்துக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும். வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சூறாவளியாக சுற்றுப் பயணம் செய்து கிராமம் கிராமமாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார். கலிக்கம்பட்;டி; ஊராட்சிக்கு உட்பட்ட போக்குவரத்து நகரில் நடைபெற்ற பிரச்சாரத்திற்கு ஆத்தூர் ஒன்றிய செயலாளர் முருகேசன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர் மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் கோமதி செல்வகுமார் வரவேற்றார்;. போக்குவரத்து நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது வெற்றி வேட்பாளர் அமைச்சர் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது தமிழகத்தில் தனியாரிடம் இருந்த போக்குவரத்து துறையை அரசு போக்குவரத்து துறையாக மாற்றி போக்குவரத்து துறை ஊழியர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். திமுக ஆட்சியின்போது இங்கு போக்குரத்து நகர் உருவாக்கப்பட்டு, நூற்றுக் கணக்கானோர் பயன்பெற்றுள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு சமுதாயக்கூடம் மற்றும் நாடக மேடை வசதி கேட்டுள்ளனர். தேர்தல் முடிந்த பின்பு அதற்காக பணிகள் விரைவில் தொடங்கும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். போக்குவரத்து ஊழியர்களின் நலன் காக்க உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

பிரச்சாரத்தின்போது ஆத்தூர் ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தாகென்னடி, ராஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தண்டபாணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ராஜாமணி, தேமுதிக ஒன்றிய செயலாளர் முத்து, முன்னால் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பிள்ளையார்நத்தம் உலகநாதன், கருப்பையா, சிவக்குமார், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், முன்னாள் ஒன்றிய பொருளாளர் கலிக்கம்பட்டி லட்சுமணன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தவெக கூட்டத்தில் பாட்டில் வீசப்பட்டது தொடர்பாக 2 பேர் கைது

## மதுபோதையில் சண்டையிட்ட போது வீசியதாக வாக்குமூலம்

சென்னை, ஏப்.3-

தவெக கூட்டத்தில் பாட்டில் வீசப்பட்ட விவகாரத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, வில்லிவாக்கம் சட்டப்பேரவை தொகுதி தவெக வேட்பாளரான ஆதவ் அர்ஜுனா அறிமுக கூட்டம் அயனாவரத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.



கூட்டத்தில், கட்சியின் நிர்வாகி நாஞ்சில் சம்பத் பேசி கொண்டிருந்த போது பெண்கள் அமர்ந்திருந்த இடத்தில் உடைந்த கண்ணாடி பாட்டில் துண்டுகள் வந்து விழுந்தது. இதில், கீழ்ப்பாக்கம், குட்டியப்பன் தெருவைச் சேர்ந்த கலைவாணி (45) என்பவர் காயம் அடைந்தார். மேலும், கூட்டத்தில் இருந்தவர்கள் பயந்து அங்கிருந்து கலைந்தனர்.

இதனால், ஆத்திரம் அடைந்த தவெக நிர்வாகிகள் ஆதவ் அர்ஜுனா, வி.எஸ்.பாபு உள்பட பலர் அடுத்தடுத்து கண்டனம் தெரிவித்ததோடு, தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்ய வேண்டும் எனக் கூறி போலீஸாருடன் வாக்குவாதம் செய்தனர். அவர்களை போலீஸார் சமாதானம் செய்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக, தவெக சார்பில் அயனாவரம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தின் அருகே உள்ள லாட்ஜில் தங்கி இருந்த இருவரை பிடித்து காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர்.

இதில், பிடிபட்டது அயனாவரம் பொன்வேல் புரத்தைச் சேர்ந்த அப்புகுட்டி மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த ரித்திக் (19) என்பது தெரிய வந்தது. அப்புகுட்டி மின்வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையிலும், ரித்திக் ஏசி மெக்கானிக்காக வேலை செய்து வருவதும் தெரிய வந்தது.நண்பர்களான இருவரும் லாட்ஜில் இருந்ததும், மதுபோதையில் சண்டையிட்டதில் மதுபாட்டிலை ஒருவர் மீது ஒருவர் வீசியதில் தவறுதலாக மதுபாட்டில் உடைந்து தவெக பொதுக் கூட்டத்தில் அமர்ந்திருந்த பெண் மீது விழுந்து இடது கால் முட்டியில் காயம் ஏற்பட்டது தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர். இதையடுத்து, இருவரும் கைது செய்யப்பட்டனர்.



# தமிழகத்தில் ஏப்.8 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

சென்னை, ஏப்.3-

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.8ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தின் உள் மாவட்டங்களிலிருந்து மத்திய கொங்கன்வரை, கர்நாடகத்தில் உள்பகுதி வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.3) தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 4ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

5, 6 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 8ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.6ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தை விட கொஞ்சம் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது

# “ஒரு ரூபாய் செலவில்லாமல் 10 ஆயிரம் பேருக்குக் கலைஞரின் கனவு இல்லம்!” - அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

சின்னாளபட்டி, ஏப்.03-

திண்டுக்கல் மாவட்டதில் 10 ஆயிரம் பயணாளிகளுக்கு ஒரு ரூபாய் செலவில்லாமல் கலைஞரின் கனவு இல்லம் வீடுகள் வழங்கப்படடுள்ளது என்று என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, ஆத்தூர் தொகுதியில் 2 கலைக் கல்லூரிகளை கொண்டுவந்ததன் மூலம் வருடத்திற்கு 2 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர் என்றும் பேசினார்.



அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பேசும்போது, ஒவ்வொரு முறையும் தமிழகத்தில் திமுக தலைமையிலான அரசு அமையும்போது மக்களுக்கான நலத்திட்டங்கள் 100 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த கிராமத்தில் (என்.பஞ்சம்பட்டி) குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டபோது ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு குடி தண்ணீர் பிரச்சனை தீர்க்கப்பட்டது. இதுபோல கூட்டுறவு மற்றும் பிற அரசு துறைகளில் ஒரு ரூபாய் கூட செலவில்லாமல் அரசு வேலை வழங்கப்பட்டது.

தற்போது தேர்தல் முடிந்த பின்பு 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டி அரசு பணிகள் நிரப்பப்பட உள்ளன. ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த கிராமப்புற இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றார். குறிப்பாக இப்பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு சத்துணவு துறையில் முன்னுரிமை கொடுத்து அரசு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. மக்களுக்கான நலத்திட்டங்களை குறிப்பாக பெண்களுக்கான நலத்திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றி வரும் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் நல்லாட்சி தொடர உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கான பெண்கள் நாங்கள் என்றும், உதயசூரியன் சினத்திற்குத்தான் வாக்களிப்போம் என்றனர்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர் மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர் முருகேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தண்டபாணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ராஜாமணி, தேமுதிக ஒன்றிய செயலாளர் முத்து, முன்னால் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தாகென்னடி, ராஜேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கோமதி செல்வகுமார், பிள்ளையார்நத்தம் உலகநாதன், கருப்பையா, சிவக்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், கண்ணன் உட்பட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிக்க சாய்வுதள வசதிகள்



சென்னை, ஏப்.3-

தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிக்க ஏதுவாக சாய்வுதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனத் தேர்தல் ஆணையம் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் வரும் ஏப்.23 அன்று சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடிகளில் சாய்வுதள நடைபாதை உள்ளிட்ட வசதிகளைச் செய்து கொடுக்கக் கோரி மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயக்குமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், "தேர்தலின் போது மாற்றுத் திறனாளிகளுக்கான சட்ட விதிகளை அமல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க தேர்தல் அதிகாரிகளான அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்வுதள வசதியை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக முழுமையான விவரங்களுடன் மனுத் தாக்கல் செய்யப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகள் வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகும் வகையில் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

# ராகவ் சத்தாவிடம் இருந்து மாநிலங்களவை கட்சித் துணைத் தலைவர் பதவியை பறிக்க ஆம் ஆத்மி நடவடிக்கை

புதுடெல்லி, ஏப்.3-

மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சியின் துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தாவை நீக்கக் கோரி, மாநிலங்களவை செயலகத்துக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ராகவ் சத்தாவுக்குப் பதில், பஞ்சாபைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் அசோக் மிட்டல் புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட உள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது.

ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலங்களவையில் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.



இவர்களில் ஏழு பேர் பஞ்சாபில் இருந்தும், மூன்று பேர் டெல்லியில் இருந்தும் தேர்வாகி உள்ளனர்.

இந்நிலையில், பஞ்சாபில் இருந்து தேர்வாகிய ராகவ் சத்தாவை மாநிலங்களவையில் கட்சியின் துணைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, அதே மாநிலத்தில் இருந்து தேர்வாகிய மற்றொரு உறுப்பினரான அசோக் மிட்டலை அப்பதவிக்கு நியமிக்க கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அசோக் மிட்டல், "ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவர் பொறுப்பை, கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் (அரவிந்த் கேஜ்ரிவால்) என்னிடம் ஒப்படைத்துள்ளார். நான் எனது கடமைகளை சரியாகச் செய்வேன். கட்சியின் நிலைப்பாட்டையும், நாட்டின் நலன்களையும் அவையில் நான் வலிமையுடன் எடுத்துரைப்பேன்.

இது ஒரு வழக்கமான நடைமுறைதான். இதற்கு முன் மாநிலங்களவைத் துணைத் தலைவராக என்.டி. குப்தா இருந்தார். அவருக்குப் பதிலாக ராகவ் சத்தா வந்தார். தற்போது அப்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எங்கள் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கற்றுத் தெளிய வேண்டும் என்று கட்சி விரும்புகிறது. குறிப்பாக அரசியலில் உள்ள நடைமுறைகளையும், நிர்வாகத் திறன்களையும் நான் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டிருக்கலாம்" என்று கூறினார்.

ஆனால், ஆம் ஆத்மி கட்சி தொடர்பான விவகாரங்களில் ராகவ் சத்தா நீண்ட காலமாக மவுனம் காத்து வருவதாலும், கேஜ்ரிவால் முன்னின்று நடத்திய பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளாமல் இருந்ததுமே இந்த நடவடிக்கைக்குக் காரணம் என கூறப்படுகிறது.

# தொழிலாளர்களுக்கு ஏப்.23ம் தேதி சம்பளத்துடன் பொது விடுமுறை அளிக்க உத்தரவு




சென்னை, ஏப்.3-

தமிழகத்தில் ஏப்ரல் 23ம் தேதி சட்டப் பேரவை தேர்தல் நடைபெற உள்ளதால், அன்றைய தினம் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கேரளம் மற்றும் புதுச்சேரியில் ஏப்ரல் 9ம் தேதி அன்றும், தமிழகத்தில் ஏப்ரல் 23ம் தேதியும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி, தேர்தல் நடைபெறும் நாளன்று, தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து வகை தொழிலாளர்களும் (தினக்கூலி, தொகுப்பூதியம், வாரந்திர ஊதியம், ஒப்பந்த ஊதியம் மற்றும் மாத ஊதியம்) வாக்களிக்கும் வகையில் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.எனவே, கேரளம் மற்றும் புதுச்சேரியில் நடைபெறும் தேர்தல்களுக்கு ஏப்ரல் 9ம் தேதி அன்று அவ்வூரைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் தமிழகத்தில் ஏப்ரல் 23ம் தேதி அன்று நடைபெறும் தேர்தலுக்கு அனைத்து தொழிற்சாலை நிறுவனங்களும் அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் தேர்தல் நாளன்று வாக்களிப்பது அவசியம் என்பதையும் தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தேர்தல் நாளில் தொழிலாளர்களுக்கு பொது விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள் பற்றிய தகவல்களை மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசியில் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கேரளத்தில் முந்தும் எல்டிஎஃப்

# வயநாடு, மலப்புரத்தில் யுடிஎஃப் வெற்றிமுகம் கருத்துக் கணிப்பில் தகவல்

திருவனந்தபுரம், ஏப்.3-

கேரளத்தில் மொத்தம் 140 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ளன. மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்க ஒரு கட்சிக்கு 71 தொகுதிகள் தேவை என்ற நிலை உள்ளது.

இந்தத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும் (எல்டிஎஃப்) காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் (யுடிஎஃப்) இடையே பலத்த போட்டி உள்ளது. அதேநேரம் பாஜகவும் சில தொகுதிகளில் இரு முன்னணி வேட்பாளர்களுக்கும் பலத்த சவாலை அளித்து வருகிறது.இந்நிலையில் மனோரமா நியூஸ்சி வேட்டர்ஸ் நடத்திய கருத்துக் கணிப்பில் காசர்கோடு, கண்ணூர் உள்ளிட்ட வடக்கு கேரளத்தில் எல்டிஎஃப் அணி அதிக இடங்களைக் கைப்பற்றும் என்று தெரிகிறது. யுடிஎஃப் முன்னணி வயநாடு, கோழிக்கோடு, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் அதிக இடங்களைக் கைப்பற்றும் என்று தெரிகிறது.

காசர்கோடு மாவட்டத்திலுள்ள மஞ்சேஷ்வர் தொகுதியில் பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் கே. சுரேந்திரன் போட்டியிடுகிறார். இதே தொகுதியில் கடந்த 2021ல் போட்டியிட்ட சுரேந்திரன், வெறும் 745 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி கண்டார்.



இம்முறையும் அவர் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைய வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இந்தத் தொகுதியில் யுடிஎஃப் அணி வேட்பாளர் ஏகேஎம் அஷ்ரப் (முஸ்லிம் லீக்) வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளது.

காசர்கோடு மாவட்டத்திலுள்ள 5 தொகுதிகளில் 2 முதல் 4 தொகுதிகளில் எல்டிஎஃப் அணி வெற்றி பெற வாய்ப்புள்ளது. யுடிஎஃப் அணி ஒன்று முதல் 3 தொகுதிகளில் வெல்ல வாய்ப்புள்ளது. என்டிஏ அணிக்கு இங்கு ஒரு சீட் வெல்ல வாய்ப்பு உள்ளது.

கண்ணூர் மாவட்டத்திலுள்ள 11 தொகுதியில் எல்டிஎஃப் அணிக்கு 6 முதல் 8 இடங்களும், யுடிஎஃப் அணிக்கு 3 முதல் 5 இடங்களும் கிடைக்கும். வயநாடு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளையும் யுடிஎஃப் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள 13 தொகுதிகளில் 5 முதல் 7 இடங்களையும், எல்டிஎஃப் 6 முதல் 8 இடங்களையும் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மலப்புரத்திலுள்ள 16 தொகுதிகளில் யுடிஎப் 14 முதல் 16 இடங்களையும், எல்டிஎஃப் 2 இடங்களையும் வெல்லும் என்றும் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஜி.கே.வாசன் கிறிஸ்தவர்களுக்கு புனித வெள்ளி வாழ்த்து

சென்னை, ஏப்.3-

இயேசுவின் ஆசீர்வாதத்தை பெற்று கிறிஸ்தவ பெருமக்கள் நலமுடன் வாழ தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் புனித வெள்ளி வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அக்கட்சி தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:



"கிறிஸ்தவர்களின் வழிபாட்டு ஆண்டில் புனித வெள்ளி மிகவும் முக்கியமான நாளாகும். ஏப்.03ம் தேதி (நாளை) இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை உணர்த்தும் நாளாக, இறைவனின் அன்பை சிந்திக்கும் நாளாக புனித வெள்ளியானது உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் கடைபிடிக்கப்படுகிறது.இந்நாளில் கிறிஸ்தவ பெருமக்கள் தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகள் செய்து தவக்கால வழிபாடுகளில் பங்கேற்கின்றனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த நாளான வெள்ளிக் கிழமையை கிறிஸ்தவர்கள் புனித வெள்ளி, பெரிய வெள்ளி, நீண்ட வெள்ளி, சோக வெள்ளி என பல்வேறு பெயர்களுடன் அனுசரித்து வருகின்றனர்.

குறிப்பாக இயேசு கிறிஸ்து அடைந்த துன்பங்களை நினைவு கூறும் விதமாக இந்நாள் அமைகிறது. இயேசு கிறிஸ்து உயிர் நீத்த தினமானது புனித வெள்ளியாகவும், மீண்டும் உயிர்த்தெழுந்த தினமானது ஈஸ்டர் ஞாயிறாகவும் பின்பற்றப்படுகிறது. இயேசு பிரான் மனித குலத்தை பாவத்தில் இருந்தும், சாவில் இருந்தும் மீட்பதற்காகவும் இறை வாழ்வை மனிதருக்கு அளிப்பதற்காகவும் துன்பங்கள் அனுபவித்து சிலுவையில் இறந்தார் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.

மேலும் தீமை ஒரு போதும் வெற்றி பெறாது, அன்பு, இரக்கம், மன்னிப்பு ஆகியவை தான் இறுதியில் வெற்றி பெறும் என்றார் இயேசுபிரான். இயேசுபிரானின் நற்பண்புகளை பின்பற்றி அனைத்து தரப்பு மக்களிடமும் ஒற்றுமையாக பழகி, ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் உறுதுணையாக இருப்போம். இயேசுவின் ஆசீர்வாதத்தை கிறிஸ்தவ பெருமக்கள் பெற்று, வளமுடன், நலமுடன் வாழ தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் புனித வெள்ளி வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

## ஈரானிடம் இருந்து மீண்டும் கச்சா எண்ணெய் இறக்குமதி?

# 6 லட்சம் பேரலுடன் குஜராத் வருகிறது கப்பல்

புதுடெல்லி, ஏப்.3-

ஈரானிடமிருந்து இந்தியா மீண்டும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் ஏற்றிய கப்பல் குஜராத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.



மேற்கு ஆசியாவில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், இந்தியா ஈரான் இடையிலான கச்சா எண்ணெய் வர்த்தகம் மீண்டும் உயிர் பெறத் தொடங்கியுள்ளது. சுமார் 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெயுடன் ஈரானிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்று நாளை மறுநாள் அதாவது வரும் 4ம் தேதி குஜராத் துறைமுகத்திற்கு வரவுள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான எண்ணெய் வர்த்தக உறவு தற்காலிகமாகப் புதுப்பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஈரானின் கார்க் தீவிலிருந்து 'பிங் ஷுன்' என்ற கப்பல் குஜராத்தின் வாடினார் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கச்சா எண்ணெயை வாங்குவது யார் என்பது குறித்து அதிகாரப்பூர்வத் தகவல்கள் இல்லை. எனினும், வாடினார் பகுதியில் ரஷ்யாவின் ஆதரவுடன் செயல்படும் நயாரா எனர்ஜி சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும், இங்கிருந்து தான் மத்தியப் பிரதேசத்தின் பினா பகுதியில் உள்ள பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கச்சா எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. சந்தைக் கணிப்பு நிறுவனமான 'கெப்லர்' தரவுகளின்படி, இந்தக் கப்பலின் இறுதி இலக்கு குஜராத் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், சர்வதேசத் தடையில் உள்ள எண்ணெயைக் கொண்டு வரும் கப்பல்கள், பிடிபடாமல் இருக்கப் பயணத்தின் பாதியிலேயே தங்கள் இலக்கை மாற்றிக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டுள்ளதால், இதில் கூடுதல் கவனம் தேவைப்படுவதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். கடந்த 2019ம் ஆண்டு மே மாதம் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் விதித்த கடும் பொருளாதாரத் தடைகளுக்குப் பிறகு, இந்தியா ஈரான் எண்ணெயை வாங்குவதை நிறுத்தியிருந்தது.

தற்போது ஈரான் அமெரிக்கப் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தித் தட்டுப்பாட்டைப் பேபிக்க, ஏற்கெனவே ஏற்றப்பட்ட சரக்குகளுக்கு மட்டும் அமெரிக்கா ஏப்ரல் 19 வரை 30 நாள் அவகாசம் வழங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இந்தியா இந்த கச்சா எண்ணெயை வாங்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# "ஜனநாயகன் படத்துக்கு எதிராக கூட்டு சூழ்ச்சி... எனக்கும் நீதி வேண்டும்!" திருச்சியில் விஜய் ஆவேசம்

திருச்சி, ஏப்.3-

"என் கடைசி படமான ஜனநாயகன் வெளிவந்தால், மனதுக்கு நெருக்கமான சொந்த பந்தங்களான நாம், நெஞ்சுக்கு நெருக்கமாகிவிடுவோம். நாம் நெருக்கமாகி தேர்தலில் மிகப் பெரிய ஆயுதமாக மாறிவிடுமோ என்பதற்காக ஒரு கூட்டு சூழ்ச்சி நடக்கிறது. உங்களுக்காக நீதி கேட்க வந்த எனக்கும்தான் நீதி வேண்டும்" என்று திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசினார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் உள்ள மரக்கடை எம்ஜிஆர் சிலை முன்பு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் தவெக தலைவர் விஜய் பேசியவது: "தமிழகத்தில் காஸ் சிலிண்டர் பிரச்சினை பெரிதாக இருக்கிறது. காஸ் சிலிண்டர் பிரச்சினையால் ஏராளமான டீக்கடைகள், ஹோட்டல்கள் மூடிவிட்டனர். இதனால் எவ்வளவு கஷ்டங்கள், நஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது. அவர்கள் (பாஜக) கொஞ்சம் உஷாராக இருந்திருந்தால் காஸ் தட்டுப்பாட்டை



தவிர்த்திருக்கலாம். இவர்களாவது (திமுக) முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால் காஸ் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்தி இருக்கலாம். இவர்கள் இருவரும்தான் (திமுக பாஜக) இதற்கு காரணம்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலினிடம் கேட்டால் நமக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை என்பார். அவரது வீட்டில் ஒரு ரெய்டு, ஒரு பிரச்சினை என்றால் டெல்லிக்கு பறந்து சென்று வருவார். தமிழக முதல்வர் காஸ் சிலிண்டர் பிரச்சினைக்கு டெல்லிக்கு பறந்து சென்று வந்தால் கொஞ்சம் பிரயோஜனமாக இருக்கும். எதையெல்லாம் செய்ய முடியாதோ, அதையெல்லாம் பொய் வாக்குறுதியாக கொடுத்து ஏமாற்றுவது முதல்வரோட வேலை. தற்போது அடுத்த செட் பொய் வாக்குறுதிகளை ரெடி பண்ணிட்டார்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத, அடிப்படை வசதிகள் செய்யாத திமுக அரசை நாம் தூக்கி எறியவேண்டும். திருச்சியை சேர்ந்த ஒரு அமைச்சர் இருக்கிறார். நகராட்சி துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சமாக வாங்கிட்டு, தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காமல் செய்திருக்கிறார். இது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை.

இளைஞர்கள், இளம்பெண்களின் வேலை வாய்ப்புகளை பறித்த ஸ்டாலின் அரசை தூக்கி வீசி எறியவேண்டும். பாதுகாப்பு இல்லாத, சட்டம் ஒழுங்கு இந்த அரசை தூக்கி எறிய வேண்டும். நகராட்சித் துறையில் மட்டும் ரூ.1,000 கோடி ஊழல் என்றால் மற்ற துறைகளை எடுத்து பார்த்தால் தலைசுற்றி போய்விடும்.

எனது சொந்த பந்தமான உங்களிடம் உரிமையுடன் ஒரே ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்கிறேன். இந்த தேர்தலில் ஏலத்தில் எடுத்துள்ள கல்லாபெட்டி கூட்டணியோடு சேர்ந்து, 'மற்றும் பலர்' கூட்டணியோடு கள்ள கூட்டணியாக சேர்ந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து உங்கள் விஜய்யை எதிர்க்கின்றனர்.

திமுகவையும், பாஜகவையும் நம்பாதீங்க. திமுகவுக்கோ, மற்றும் சிலர் கூட்டணிக்கோ ஓட்டு போட்டாலும் சரி. அது யாருக்கு செல்லும் என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இதில் உங்களுக்கு எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

கரூர் நிகழ்ச்சி சூழ்ச்சி என்று சொல்வதை போல நமது கடைசி படமான ஜனநாயகன் வெளிவந்தால், நமது மனதுக்கு நெருக்கமான நமது பூர்வ சொந்த பந்தங்களான நாம் நெஞ்சுக்கு நெருக்கமாகிவிடுவோம். நாம் நெருக்கமாகி தேர்தலில் மிகப்பெரிய ஆயுதமாக மாறிவிடுமோ என்பதற்காக ஒரு கூட்டு சூழ்ச்சி நடக்கிறது. உங்கள் விஜய் நான் கேட்கிறேன். உங்களுக்காக நீதி கேட்க வந்த எனக்கும்தான் நீதி வேண்டும்.

அவர்கள் கொள்ளை அடிக்க சிலரை இதுவரைக்கும் மக்களை ஏமாற்றி வருகின்றனர். காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலரை கையில் இல்லை யில்லை, பணப்பையில் போட்டுகொண்டு சிறுபான்மை மக்களை ஏமாற்ற பாதி கதர் கூட்டணி, மற்றும் பலர் கூட்டணியின் டெல்லி ஓனரோடு ஒரு கொல்லைப்புற கள்ள கூட்டணி. பாதி காவி கூட்டணி. ஆனால் கொள்கை என்று நம்மை ஏமாறுகின்றனர்.

திமுகவையும், பாஜகவையும் நம்பாதீங்க. இவர்கள் இருவரும் வேறு வேறு கூட்டணி இல்லை. இவர்கள் ஒரே கூட்டணிதான். எனவே வரும் தேர்தலில் தவெகவுக்கு உங்களது ஆதரவை கொடுங்கள்.

உங்களுக்காக எனது வசதி வாய்ப்புகளை தூக்கி எறிந்துவிட்டு வந்துள்ளேன். நான்கு முனை, நாற்பது முனை போட்டி, எத்தனை முனை போட்டி வந்தாலும் இங்கு திமுகவுக்கும், தவெகவுக்கும் மட்டுமே போட்டி. மக்கள் விரோத ஆட்சி நடத்தும் திமுகவா, மக்களை நேசிக்கின்ற விஜய் வேண்டுமா என்பதுதான் இந்த தேர்தல். விசில் புரட்சி தேர்தலாக இருக்கவேண்டும்" என்று விஜய் பேசினார்.



"மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுக்கும் அறக்கட்டளை!"

## திருப்பூரில் 150 குழந்தைகளுக்குப் பாடநூல்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கல்!

திருப்பூர் ஏப். 3-

திருப்பூர் அனுப்பர்பாளையம், கவிதா லட்சுமி நகர் அரசு ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பிரிவு உபசார விழாவை முன்னிட்டு, மக்கள் பொது மனித சமூக சேவை - அறக்கட்டளை சார்பில் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளையின் நிறுவனர் தலைவர் யி. வினோத்குமார் தலைமை தாங்கி, மாணவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். தலைமைத் தலைவர் ஆர்.முருகானந்தம், தலைமைப் பொருளாளர் எஸ். சக்திவேல், திருப்பூர் மாவட்ட ஓட்டுநர் சங்கத் தலைவர் எஸ். மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

*நலத்திட்டங்கள்:* பள்ளியின் தலைமை ஆசிரியர் விடுத்த அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்த விழாவில், சுமார் 150 குழந்தைகளுக்கு பேனா, பென்சில் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் மோகன் தினேஷ்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு இந்த வாய்ப்பினை வழங்கிய பள்ளித் தலைமை ஆசிரியருக்கும், கலந்து கொண்ட நிர்வாகிகளுக்கும் அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில்,தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100% வாக்கு பதிவினை வலியுறுத்தி வண்ணக்குடைகளால் அலங்காரம் செய்து, தேர்தலின் மகத்துவத்தை வண்ணக் கோலங்கள் வரைந்து, ஒயிலாட்டம் ஆடி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்




■ தென்காசி சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மூன்று சக்கர வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. துவக்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தனிச்சியம், அலங்காநல்லூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்த பறக்கும் படை அலுவலர்கள் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், பார்வையிட்டு ஆய்வு செய்தார்



■ அருள்மிகு சுப்ரமணியர் சுவாமி திருக்கோயில் சென்னி மலையில் பங்குனி உத்திர தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் கோயில் செயல் அலுவலர் கோயில் கண்காணிப்பாளர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள், திரளான பக்தகோடிகள் கலந்து கொண்டு வடம் பிடித்து இழுத்தனர். மேலும் வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது.



■ திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மு. ஜெயக்குமார் அவர்கள், இன்று காலை உடுமலை நேதாஜி மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்ட பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த வாக்கு சேகரிப்பின் போது பின்வரும் நிர்வாகிகள் உடனிருந்தனர். தலைமை: உடுமலை நகரக் கழகச் செயலாளர் வேலுச்சாமி.முக்கிய நிர்வாகிகள்: பொதுக்குழு உறுப்பினர் யு.என்.பி. குமார், நகர மன்ற உறுப்பினர்கள் அர்ஜுனன், ஆறுச்சாமி, கலை ராஜன்.பிற நிர்வாகிகள்: வக்கீல் சிதம்பரசாமி, கவி ஸ்டுடியோ கருணாகரன் மற்றும் உடுமலை நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பலர் கலந்துகொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினர்.




## அண்ணாமலை அன்புக் கூட்டம் சமூக சேவை அமைப்பின் அதிரடி ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர், ஏப்.3-

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், மடத்தகுளத்தில் 'அண்ணாமலை அன்புக் கூட்டம் சமூக சேவை அமைப்பு' சார்பாக நிர்வாகிகளின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.அமைப்பின் தலைமை நிறுவனர் திரு. டி.புஷ்பலிங்கம் டெல்லி அவர்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலத் தலைவராக முன்னாள் காவல்துறை ஆய்வாளர் திரு. அய்யாசாமி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*நோக்கம் - தீர்மானம்:* அனைத்து மாவட்டங்களிலும் புதிய பொறுப்பாளர்களை நியமிப்பது குறித்தும், ஏழை எளிய மக்களுக்குத் தேவையான மருத்துவ மற்றும் கல்வி உதவிகளை முன்னின்று செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் மக்கள் பணியைத் தொடரப்போவதாக நிர்வாகிகள் உறுதியேற்றனர்.



■ தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதியின் ஆணைக்கிணங்க என்.ஆனந்த் பொதுச் செயலாளரின் அறிவுறுத்தல்களின் படி, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமையில் சங்கரன்கோவில் தொகுதிக்கு வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ராமராஜன் எம் சி ஏ ற்கு வரவேற்பு வழங்கப்பட்டது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கனகராஜ் குட்டி கணேசன் கௌதம் முத்துக்காளை சபரி ராஜன் ஆதிரா முருகன் சதீஷ் குமார், மாவட்ட நிர்வாகி கழக நிர்வாகி மற்றும் நகர செயலாளர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மறவர்பட்டி ஸ்ரீ மஞ்சமலை முத்தாலம்மன் கோவில் பங்குனி பொங்கல் உற்சவ விழா

அலங்காநல்லூர்.ஏப். 03-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் மறவர்பட்டி கிராமத்தில்

ஸ்ரீ மஞ்சமலை ஸ்ரீ முத்தாலம்மன் கோவில் வருடாந்திர பங்குனி பொங்கல் உற்சவ விழா நடைபெற்றது. 17.03..26 சாமி சாட்டுதலுடன் நிகழ்ச்சி தொடங்கியது 27.03.26. இரவு 06.30 மணியளவில் பூசாரி மற்றும் நேர்த்திக்கடன் செலுத்துபவர்களுக்கு காப்பு கட்டுதலும், அடுத்த நாள் காலை பிடிமன் கொடுத்தல் ஊத்துக்காடு சென்று தீர்த்தம் எடுத்து வந்து, கன்னிமார் கருப்பசாமி கோயில்களில் பொங்கல் வைத்து அபிஷேக ஆராதனை செய்தல். அதனைத் தொடர்ந்து இரவு 10.30 மணியவில் முத்தாலம்மன் கண் திறக்கின்ற இடத்தில் உள்ள மேடையில் எழுந்தருளி கண் திறந்து ஆடை ஆபரண அலங்காரம் செய்து மேளதாளம் முழங்க வானவேடிக்கையுடன் கோவில் வந்து சேருதல் பின்னர் மாவிளக்கு முளைப்பாரி ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து மறுநாள் காலை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நேர்த்திகடன் செலுத்தும் விதமாக முத்தாலம்மன் கோவிலில் பால்குடம் அக்கினி சட்டி எடுத்தல் அழகு குத்துதல் அங்கபிரதட்ஷணம் செலுத்துதலும் அன்று பகல் ஒரு மணி அளவில் பொங்கல் வைத்து கிடாய் வெட்டுதல் மாலை அம்மன் பூஞ்சோலை செல்லுதல் நிகழ்ச்சியும் சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது.

கிராமத்தின் சார்பாக மந்தை திடலில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. மஞ்சள் நீராடுதல் பல்லயம் பிரித்தல் பிரசாதம் வழங்குதல். கலை நிகழ்ச்சிகளுடன் திருவிழா நிறைவு பெற்றது. இந்த திருவிழாவுக்கான ஏற்பாடுகளை மறவர்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000